

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 31-வது தேசிய கண்தான இருவார விழாவில், கண்தானம் குறித்து நடைபெற்ற, கவிதை மற்றும் ரங்கோலி போட்டிகளில் வெற்றிபெற்ற மருத்துவகல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகளும், பாராட்டு சான்றிதழ்களும் ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கலையரங்கத்தில் இன்று (07.09.2016) வழங்கினார். மருத்துவ கல்லூரி முதல்வர் மரு. ஜி. ரவீந்திரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 605/2016 நாள்: 07.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 31-வது தேசிய கண்தான இருவார விழாவில், கண்தானம் குறித்து நடைபெற்ற, கவிதை மற்றும் ரங்கோலி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு நினைவு பரிசுகளை ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கலையரங்கத்தில் இன்று (07.09.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட கண்ணொளி இழப்பு தடுப்பு சங்கத்தின் சார்பாக, 31-வது தேசிய கண்தான இருவார விழா, ஆசாரிப்பள்ளம், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள கலையரங்கத்தில் இன்று (07.09.2016) நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று, கண்தானம் குறித்து நடைபெற்ற, கவிதை போட்டி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மற்றும் ரங்கோலி போட்டிகளில் வெற்றிபெற்ற மருத்துவகல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகளும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கி தெரிவித்ததாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட கண்ணொளி இழப்புத் தடுப்புச்சங்கத்தின் சார்பாக, 31-வது தேசிய கண்தான இருவார விழா (25.08.2016 முதல் 08.09.2016 வரை) நடைபெறுகிறது. இதில் கண்தானம் குறித்து பொதுமக்களிடையேயும், மாணவ, மாணவியர்களிடையேயும் விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், கண்ணொளி இழப்பு தடுப்புச்சங்கத்தின் திட்ட மேலாளர் மற்றும் தலைமை கண் மருத்துவருமான மரு. அ. சமரபுரி அவர்கள் கண் தானம் குறித்தும், ஆசாரிப்பள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் கண் மருத்துவர் மரு. ஆர். பீனா அவர்கள் கண் வங்கி குறித்தும், கருத்துரைகள் வழங்கவுள்ளார்கள்.

இதுவரை நமது மாவட்டத்தில் 2,110 நபர்கள் கண்தானம் செய்துள்ளார்கள். நாம் கண்தானம் செய்வதோடு, மற்றவர்களையும் கண்தானம் செய்ய ஊக்கப்படுத்த வேண்டும். மேலும் நமது மாவட்டத்திலிருந்து கடந்த ஆண்டைவிட, இவ்வாண்டில் 95 சதவீதம் நபர்கள் கண்தானம் செய்ய பதிவு செய்துள்ளார்கள். இதனால் பார்வையற்றோர்களின் வாழ்க்கை இருளிலிருந்து மீட்டு, வெளிச்சத்திற்கு கொண்டுவர முடியும். எனவே பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் அனைவரும் கண்தானம் செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மருத்துவ கல்லூரி முதல்வர் மரு. ஜி. இரவீந்திரன், கண்ணொளி இழப்பு தடுப்பு சங்கத்தின் திட்ட மேலாளர் மரு. அ. சமரபுரி, திரு. ஆர். சங்கர பாண்டியன், மரு. இராதாகிருஷ்ணன், மரு. பிரின்ஸ், மரு. கிங்சால், மரு. சுரேஷ்பாலன், மரு. மேரி விஜயா, மரு. ஜெயலால், மரு. அருள் பிரகாஷ், கண் மருத்துவர் மரு. ஆர். பீனா உள்ளிட்ட மருத்துவர்கள், மருத்துவகல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.